வெளியிடப்பட்ட தேதி: 02/ஜனவரி/2025

## விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்

இந்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் ("**விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்**") எச்.டி.எஃ.ப்.சி வங்கி லிமிடெட் ("**எச்.டி.எஃ.ப்.சி வங்கி**" அல்லது "**வங்கி**") வழங்கும் ப்ரீபெய்டு கார்டுகளுக்கு (இதன் பின்னர் வரையறுக்கப்பட்டுள்ளவாறு) பொருந்தும், அவற்றை இவை ஒழுங்குபடுத்துகின்றன. இந்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் அவ்வப்போது எச்.டி.எஃ.ப்.சி வங்கி விதிக்கின்ற வேறு ஏதேனும் விதிமுறைகளுக்கும் கூடுதலாக இந்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் இருக்குமே தவிர, அவற்றின் மதிப்பைக் குறைக்காது.

1. **வரையறைகள்**

அர்த்தம் அல்லது சூழ்நிலையில் அவற்றுக்கு முரண்பாடுகள் ஏதேனும் இல்லை என்றால், கீழே பட்டியலிடப்பட்டுள்ள தடித்த எழுத்துக்களில் உள்ள சொற்கள் பின்வரும் அர்த்தங்களைக் கொண்டிருக்கும்:

"**கணக்கு**" என்பது, கார்டுதாரர் எச்.டி.எஃ.ப்.சி வங்கியில் வைத்திருக்கும் ஏதேனும் சேமிப்பு/நடப்புக் கணக்கைக் குறிக்கும்;

**எச்சரிக்கைகள்**" என்பது, கார்டுதாரர் மற்றும்/அல்லது எச்.டி.எப்.சி. வங்கியின் ஒப்புதல் அல்லது அமைக்கப்பட்ட அறிவுறுத்தல்களின் அடிப்படையில் கார்டுதாரருக்கு மொபைல் போன் மூலம் குறுஞ்செய்தியாக (எஸ்.எம்.எஸ்.) அல்லது மின்னஞ்சல் வழிச் செய்தியாக அல்லது ஏதேனும் சமூக ஊடகம் அல்லது வேறு ஏதேனும் தளம் வழியாக அறிவிப்புகளாக அனுப்பப்படும் தனிப்பயனாக்கப்பட்ட செய்திகளைக் குறிக்கும்;

"**பொருந்தக்கூடிய சட்டம்**" என்பது, இந்தத் தேதியிலிருந்து அல்லது அதற்குப் பிறகு, அவ்வப்போது திருத்தப்பட, மாற்றப்பட, மீண்டும் இயற்றப்பட, மாற்றியமைக்கப்படக் கூடிய எந்தவொரு சட்டம், சாசனம், சட்டமியற்றல், துணைச் சட்டமியற்றல், ஒழுங்குமுறை, இயற்றுதல், அவசரச் சட்டம், ஒப்பந்தம், விதி, தீர்ப்பு வழங்கல், உத்தரவு, தீர்ப்பு, ஆணை, துணைச் சட்டங்கள், பொதுச் சட்டத்தின் விதி, அனுமதிகள், வழிநடத்தல்கள், உத்தரவுகள், வழிகாட்டுதல்கள், கொள்கை, உரிமங்கள், தேவைப்பாடு அல்லது கேள்விக்குரிய விஷயத்தின் மீது அதிகார வரம்பைக் கொண்ட ஏதேனும் அரசு அதிகார அமைப்பின் சட்ட அதிகாரம் கொண்ட ஏதேனும் விளக்கம் அல்லது அறிவிப்பின் ஒத்த வடிவம், முடிவு அல்லது தீர்மானம், பயன்பாடு அல்லது செயல்படுத்தல் ஆகியவை உட்பட, ஏதேனும் அரசுக் கட்டுப்பாடு அல்லது

நிபந்தனையை குறிக்கும்;

“**விண்ணப்பதாரர்**” என்பது, கார்டுதாரருக்கு எச்.டி.எப்.சி. வங்கி ப்ரீபெய்டு கார்டை (கார்டுகளை) வழங்குவதற்கான விண்ணப்ப படிவத்தைச் சமர்ப்பிக்கும் நபரைக் குறிக்கும்;

“**விண்ணப்பப் படிவம்**" என்பது, கார்டுதாரருக்கு ப்ரீபெய்டு கார்டை வழங்குவதற்காக, அனைத்து இணைப்புகள் மற்றும் ஆணைகள் உட்பட, விண்ணப்பதாரரால் முறையாக நிரப்பப்பட்டு, சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பத்தைக் குறிக்கும்;

"**கார்டு இருப்பு**" என்பது, அவ்வப்போது ப்ரீபெய்டு கார்டுகளில் லோடு செய்யப்படும் இருப்பைக் குறிக்கும்; "**கார்டுதாரர்**" என்பது, விண்ணப்பதாரர் ப்ரீபெய்டு கார்டு வழங்குமாறு சமர்ப்பித்த விண்ணப்பத்தின் பேரில், எச்.டி.எஃப்.சி வங்கி ப்ரீபெய்டு கார்டு(களை) வழங்கிய நபரைக் குறிக்கும்; "**வாடிக்கையாளர் சேவை**" என்பது, ப்ரீபெய்டு கார்டு பற்றிய ஏதேனும் கேள்விகளுக்கு பதில் அளிப்பதற்காக கார்டுதாரர்களுக்கு எச்.டி.எஃப்.சி வங்கி வழங்குகின்ற கட்டணமில்லாத தொலைபேசி வாடிக்கையாளர் சேவை வசதியைக் குறிக்கும். இந்த எண் ப்ரீபெய்டு கார்டின் பின்புறத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும்;

“**எச்.டி.எப்.சி. வங்கி இணையதளம்**” என்பது, வங்கிக்குச் சொந்தமான, வங்கியால் இயக்கப்படுகின்ற மற்றும் பராமரிக்கப்படுகின்ற www.HDFCbank.com -ஐக் குறிக்கும்;

"**கே.ஒய்.சி வழிகாட்டுதல்கள்**" என்பது, பிப்ரவரி 25, 2016 தேதியிடப்பட்ட ஆர்.பி.ஐயின் முதன்மை வழிகாட்டுதல் - உங்கள் வாடிக்கையாளரை அறிந்து கொள்ளுங்கள் (கே.ஒய்.சி.) -2016 வழிகாட்டுதல் எண். டி.பி.ஆர்.ஏ.எம்.எல், பி.சி.எண்.81/14.01.001/2015-16 ஐயும், இந்திய ரிசர்வ் வங்கி வெளியிடுட்டுள்ள பிற பொருந்துகின்ற 'உங்கள் வாடிக்கையாளரை அறிந்து கொள்ளுங்கள்' உத்தரவுகள் மற்றும் வழிகாட்டுதல்களையும் குறிக்கும்;

"**பி.பி.ஐ. முதன்மை வழிகாட்டுதல்கள்**" என்பது, ஆர்.பி.ஐ./டி.பி.எஸ்.எஸ்/2017-18/58 முதன்மை வழிகாட்டுதல் சி.ஓ.டி.பி.எஸ்.எஸ்.பி.ஓ.எல்.சி. எண்.எஸ்-1164/02.14.006/2021-22 என்ற குறிப்பு எண்ணைக் கொண்டுள்ள,. அக்டொபர் 11, 2017 தேதியிடப்பட்ட "ப்ரீபெய்டு பேமெண்ட் கார்டுகள் வழங்குதல் மற்றும் செயல்பாடு குறித்த முதன்மை வழிகாட்டுதல்" என்ற தலைப்பில் இந்திய ரிசர்வ் வங்கியால் வெளியிடப்பட்ட முதன்மை வழிகாட்டுதலைக் குறிக்கும்;

**"ப்ரீபெய்டு கார்டு(கள்)"** என்பது, இந்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கேற்ப எச்.டி.எஃப்.சி வங்கி கார்டுதாரர்களுக்கு வழங்கும் 'ப்ரீபெய்டு கார்டு' என்ற பெயரைக் கொண்ட மின்னணு வடிவத்தில் வழங்கும் ப்ரீபெய்டு கார்டைக் குறிக்கும்;

"**பரிவர்த்தனை(கள்)**" என்பது, இந்த ப்ரீபெய்டு கார்டு(களை) பயன்படுத்தி செய்யப்படும் எந்தவொரு பரிவர்த்தனை(களையும்) குறிக்கும்).

2. **விளக்கம்**

சூழ்நிலைக்கு வேறுவிதமாகத் தேவைப்பட்டால் தவிர, இந்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளில்:

(a) ஒருமையில் கூறப்படுவதில் பன்மையும், பன்மையில் கூறப்படுவதில் ஒருமையும் அடங்கும், எந்த பாலினத்தைக் குறிக்கும் சொற்களில் மற்ற பாலினங்களும் உள்ளடங்கியுள்ளதாகக் கருதப்படும்;

(b) இங்கே", "இதில்", "இதனால்", "இதற்கு" என்ற சொற்கள் மற்றும் அதன் தோன்றல்கள் அல்லது அவற்றை ஒத்த சொற்கள் இந்த மொத்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளையும் குறிக்கும்;

(c) "உள்ளடங்கிய" அல்லது "உட்பட" என்ற சொல்லுக்கான அர்த்தங்களை வரம்பில்லாமல் பொருள் கொள்ள வேண்டும்;

(d) ஏதேனும் பத்தியைக் குறிப்பிடுவது என்பது, இந்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் பத்தியைக் குறிக்கும்;

(e) எந்தவொரு சட்ட அமைப்பு, சட்டம், சுற்றறிக்கை அல்லது ஒழுங்குமுறை அல்லது அதன் ஏதேனும் விதியைக் குறிப்பிடுவது என்பது, இங்கேயுள்ள தேதிக்குப் பிறகு, அவ்வப்போது திருத்தப்பட, கூடுதலாகச் சேர்க்கப்பட அல்லது மீண்டும் இயற்றப்படக் கூடிய அந்த சட்ட அமைப்பு, சட்டம், சுற்றறிக்கை அல்லது ஒழுங்குமுறை ஆகியவற்றை உள்ளடக்கியதாக இருக்கும். ஒரு சட்டப்பூர்வ விதியைப் பற்றிய எந்தவொரு குறிப்பும் அவ்வப்போது அந்த விதியின் கீழ் உருவாக்கப்பட்ட எந்தவொரு துணைச் சட்டத்தையும் உள்ளடக்கியதாக இருக்கும்;

(f) "நபர்" என்ற சொல்லில் தனிநபர், கூட்டாண்மை நிறுவனம், வரையறுக்கப்பட்ட பொறுப்பு கூட்டாண்மை, நிறுவனம் (நிறுவனங்கள் சட்டம், 2013 இன் பிரிவு 2(20) இல் வரையறுக்கப்பட்டுள்ளவாறு), நிறுவனம் (நிறுவனங்கள் சட்டம், 2013 இன் பிரிவு 2(11) இல் வரையறுக்கப்பட்டுள்ளவாறு), கூட்டுறவு சங்கம், அறக்கட்டளை, உருவாக்கப்பட்டு இருந்தாலும், இல்லாவிட்டாலும் நபர்களின் சங்கம் மற்றும் வேறு ஏதேனும் நிறுவனம் ஆகியவை அடங்கும்;

(g) தலைப்பு மற்றும் தடித்த எழுத்துக்கள் சௌகரியத்திற்காக மட்டுமே பயன்படுத்தப்படுகின்றன. அவை இந்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கான விளக்கத்தைப் பாதிக்காது.

3. **ப்ரீபெய்டு கார்டுகளுக்கான விண்ணப்பம் மற்றும் வழங்குதல்**

3.1 ப்ரீபெய்டு கார்டு வழங்குவதைப் பொறுத்த வரையில், விண்ணப்பதாரர் எச்.டி.எஃப்.சி வங்கியிடம் முழுமையான விண்ணப்பப் படிவத்தையும், ப்ரீபெய்டு கார்டு வழங்குமாறு கோரிக்கை விடுத்துள்ள நபர் தொடர்பாக எச்.டி.எஃப்.சி வங்கி கோருகின்ற தகவல்கள் மற்றும் ஆவணங்கள் உட்பட, ஆனால் அவை மட்டுமே அல்லாமல் எச்.டி.எஃப்.சி வங்கி கோருகின்ற, விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்க வேண்டிய அனைத்து தகவல்/ஆவணங்களையும் விண்ணப்பதாரர் சமர்ப்பிக்க வேண்டும்.

3.2 மேற்கண்ட பிரிவு 3.1 இன் படி விண்ணப்பம் மற்றும் ஆவணங்களை விண்ணப்பதாரர் சமர்ப்பிக்கும் போது, எச்.டி.எஃப்.சி வங்கி நிர்ணயித்துள்ள நடைமுறை மற்றும் (பி.பி.ஐ. முதன்மை வழிகாட்டுதல்கள் உட்பட, ஆனால் அவை மட்டுமே அல்லாமல்) பொருந்தக்கூடிய சட்டத்திற்கேற்ப, கார்டுதாரருக்கு வழங்க வேண்டிய ப்ரீபெய்டு கார்டில் லோடு செய்ய வேண்டிய தொகையையும் செலுத்த வேண்டும்.

3.3 தனது சுயாதீன விருப்பத்தின் பேரில், விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை நிறைவேற்றுவதற்கும், அவ்வப்போது எச்.டி.எஃப்.சி.வங்கி குறிப்பிடும் பிற நடைமுறைகளை நிறைவு

செய்வதற்கும் உட்பட்டு, கார்டுதாரருக்கு ப்ரீபெய்டு கார்டை எச்.டி.எஃப்.சி.வங்கி வழங்கலாம். ப்ரீபெய்டு கார்டை வழங்குவது எச்.டி.எஃப்.சி வங்கியின் சுயாதீன உரிமை என்பதை விண்ணப்பதாரர் ஒப்புக் கொண்டு, ஏற்றுக் கொள்கிறார், மேலும் (விண்ணப்பத்தைச் சமர்ப்பித்தல் மற்றும்/அல்லது மேற்கண்ட பிரிவு 3.2 பத்தி விதிகளின் படி ப்ரீபெய்டு கார்டில் தொகைகளை லோடு செய்தல் உட்பட, ஆனால் அவை மட்டுமே அல்லாமல்) இந்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளில் உள்ள எதுவும் எந்தவொரு கார்டுதாரருக்கும் ப்ரீபெய்டு கார்டை வழங்குவதற்கு எச்.டி.எஃப்.சி வங்கி கடமைப்பட்டுள்ளதாகக் கருதப்படாது.

3.4 விண்ணப்பதாரர் செய்த விண்ணப்பத்தை எச்.டி.எஃப்.சி வங்கி நிராகரிக்கும் பட்சத்தில், விண்ணப்பதாரர் செலுத்திய ரீஃபண்டு செலுத்தக்கூடிய தொகைகளை (ஏதேனும் இருந்தால்) எச்.டி.எஃப்.சி வங்கியின் பெயரில் அந்தப் பணம் செலுத்தப்பட்ட கணக்கில் வரவு வைப்பதன் மூலம் அவை ரீஃபண்டு செய்யப்படும்.

## 4. ப்ரீபெய்டு கார்டை செயல்படுத்துதல்

4.1 ப்ரீபெய்டு கார்டு, வழங்கப்படும் தேதியின் போது, மேற்கண்ட பத்தி 3.2 இல் உள்ள விதிமுறைகளின் படி ப்ரீபெய்டு கார்டு செயல்படுத்தப்படும் வரை அது செயல்படுத்தப்படாத நிலையில் இருக்கும், இங்கே உள்ள விதிமுறைகளின் படி ப்ரீபெய்டு கார்டு செயல்படுத்தப்படும் வரை அதைப் பயன்படுத்த முடியாது.

4.2 ப்ரீபெய்டு கார்டு பின்வருவனவற்றிற்கு உட்பட்டு செயல்படுத்தப்படும்: (a) எச்.டி.எஃப்.சி வங்கிக்கு கார்டுதாரர் மற்றும் விண்ணப்பதாரர் (மற்றும்/அல்லது அதன் வணிக நிருபர்கள்/துணை ஒப்பந்ததாரர்கள்) வழங்கும் ஆவணங்கள், எச்.டி.எஃப்.சி வங்கிக்கு 'உங்கள் வாடிக்கையாளரை அறிந்து கொள்ளுங்கள்' ("**கே.ஒய்.சி**.") சோதனைகளை மேற்கொள்வதற்குத் தேவைப்படும் ஆவணங்கள் மற்றும் எச்.டி.எஃப்.சி வங்கிக்குத் தேவையான வேறு எந்த ஆவணங்களையும் வழங்குதல்; (b) எச்.டி.எஃப்.சி வங்கி கார்டுதாரர் மற்றும் விண்ணப்பதாரரின் கே.ஒய்.சி. சோதனைகளை வெற்றிகரமாக

முடித்தல்; மற்றும் (c) கார்டுதாரர் இணைய படிவம் அல்லது இணைய இணைப்பைப் பயன்படுத்தி ப்ரீபெய்டு கார்டைப் பெற்றதை உறுதிப்படுத்துதல் மற்றும் இது தொடர்பாக எச்.டி.எஃப்.சி வங்கிக்குத் தேவைப்படும் தகவல்கள் மற்றும் ஆவணங்களை வழங்குதல்.

4.3 இங்கே எந்தவொரு முரண்பாடான விஷயம் இடம்பெற்று இருந்தாலும் கூட, கார்டுதாரர் மற்றும்/அல்லது விண்ணப்பதாரர் வழங்கிய கே.ஒய்.சி.-யில் ஏதேனும் முரண்பாடு இருந்தால் மற்றும்/அல்லது இந்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள், ஆர்.பி.ஐ. கேஒய்சி முதன்மை வழிகாட்டுதல்கள் மற்றும்/அல்லது பி.பி.ஐ. முதன்மை வழிகாட்டுதல்கள் ஆகியவற்றுக்கு கார்டுதாரர் மற்றும்/அல்லது விண்ணப்பதாரர் இணங்கவில்லை என்றால், தனது சுயாதீன விருப்பத்தின் பேரில் எச்.டி.எஃப்.சி வங்கி ,ப்ரீபெய்டு கார்டை உடனடியாக ரத்து செய்ய/ இடைநிறுத்த/ தடை செய்வதற்கு உரிமை உள்ளது. இது தொடர்பாக கார்டுதாரர் மற்றும்/அல்லது விண்ணப்பதாரருக்கு ஏற்படும் எந்தவொரு சிரமத்திற்கும் வங்கி பொறுப்பேற்காது என்பதை கார்டுதாரரும், விண்ணப்பதாரரும் ஒப்புக்கொண்டு, ஏற்றுக் கொள்கிறார்கள்.

## 5. ப்ரீபெய்டு கார்டில் ரீலோடு செய்தல்

5.1 ப்ரீபெய்டு கார்டுகளில் மதிப்பை மீண்டும் ரீலோடு செய்வதற்கு, எச்.டி.எஃப்.சி வங்கி நிர்ணயித்துள்ள தேவையான செயல்முறை மற்றும் நடைமுறைகள் மற்றும் பொருந்தக்கூடிய சட்டத்தின் அனைத்து பொருந்தக் கூடிய தேவைகளுக்கும் (பி.பி.ஐ. முதன்மை வழிகாட்டுதல்கள் உட்பட) இணங்குவதற்கு கார்டுதாரரும், விண்ணப்பதாரரும் ஒப்புக் கொள்கிறார்கள்.

5.2 https://securepayments.payu.in/HDFCforex-home என்ற இணைய முகவரிக்குச் செல்வதன் மூலம் விண்ணப்பதாரர் மற்றும்/அல்லது கார்டுதாரர் ப்ரீபெய்டு கார்டை லோடு செய்யலாம்/ ரீலோடு செய்யலாம். பி.பி.ஐ. முதன்மை வழிகாட்டுதல்களின் கீழ் அந்தப் ப்ரீபெய்டு கார்டுகளுக்கு நிர்ணயிக்கப்பட்ட வரம்புகளை கார்டு இருப்பு தாண்டாத வகையில்

ப்ரீபெய்டு கார்டை ரீலோடு செய்ய அனுமதிக்கப்படும்.

## 6. ப்ரீபெய்டு கார்டுகளை கார்டுதாரர் பயன்படுத்துதல்

6.1 பின்வருமாறு கார்டுதாரரும், விண்ணப்பதாரரும் ஒப்புக் கொண்டு, ஏற்றுக் கொள்கிறார்கள்:

(a) ப்ரீபெய்டு கார்டு இந்தியாவில் மட்டுமே மற்றும் இந்திய ரூபாயில் செலுத்த வேண்டிய பேமெண்ட்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும்;

(b) ப்ரீபெய்டு கார்டு கண்டிப்பாக மாற்றத்தக்கது அல்ல, இது எச்.டி.எ.ஃப்.சி வங்கியின் சொத்தாகும்;

(c) எந்த நேரத்திலும் கார்டில் இருக்கும் இருப்பு அளவிற்கு மட்டுமே கார்டுதாரர் ப்ரீபெய்டு கார்டைப் பயன்படுத்த முடியும்;

(d) கார்டு இருப்புக்கு எச்.டி.எ.ஃப்.சி வங்கி எந்த வட்டியும் வழங்காது;

(e) கார்டுதாரரும், விண்ணப்பதாரரும் அனைத்து பொருந்தக்கூடிய சட்டங்களுக்கும் இணங்க வேண்டும்.

6.2 இந்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் மற்றும் ப்ரீபெய்டு கார்டு தொடர்பாக அவ்வப்போது எச்.டி.எ.ஃப்.சி வங்கி வழங்கும் அனைத்து கொள்கைகள், வழிகாட்டுதல்கள் மற்றும் அறிவுறுத்தல்களால் ப்ரீபெய்டு கார்டின் பயன்பாடு நிர்வகிக்கப்படும். ஒவ்வொரு முறையும் கார்டுதாரர் ப்ரீபெய்டு கார்டைப் பயன்படுத்தி பரிவர்த்தனை மேற்கொள்ளும் போதும், அந்தப் பரிவர்த்தனையின் மதிப்பானது கார்டு இருப்பில் குறைக்கப்படும் என்பதை கார்டுதாரர் ஒப்புக் கொண்டு, ஏற்றுக் கொள்கிறார். இதில் முரணப்படாக எதுவும் இருந்தாலும் கூட, எச்.டி.எ.ஃப்.சி வங்கி, அதன் சுயாதீன விருப்பத்தின் பேரில், ப்ரீபெய்டு கார்டைப் பயன்படுத்தி செயல்படுத்த விரும்பும் எந்தவொரு பரிவர்த்தனையையும், அந்தப் பரிவர்த்தனையை நிறைவு செய்யப் போதுமான கார்டு இருப்பு இருந்தபோதிலும், எந்த காரணத்தையும் குறிப்பிடாமல், அதை மதிப்பதற்கு மறுக்கலாம் என்பதை கார்டுதாரர் ஒப்புக் கொண்டு, ஏற்றுக் கொள்கிறார்.

எச்.டி.எ.ஃப்.சி வங்கியின் அனைத்து தானியங்கி டெல்லர் இயந்திரங்களிலும் அல்லது இந்தியாவில் உள்ள விசா/மாஸ்டர்/ருபே நெட்வொர்க்கில் உறுப்பினர்களாக உள்ள பிற வங்கிகளின் தானியங்கி படெல்லர் இயந்திரங்களிலும் இந்த ப்ரீபெய்டு கார்டு ஏற்றுக் கொள்ளப்படும்.

6.3 ப்ரீபெய்டு கார்டில் ஒவ்வொரு பரிவர்த்தனையையும் (தானியங்கி டெல்லர் இயந்திரங்களில் பணம் எடுக்கும் பரிவர்த்தனைகளைத் தவிர) செயல்படுத்துவதற்கும், அங்கீகரிப்பதற்கும் குறிப்பிட்ட தனிப்பட்ட அடையாள எண் ("**கார்டு பின்**") தேவை என்பதையும்,தானியங்கி டெல்லர் இயந்திரங்களில் பணம் எடுப்பதை எச்.டி.எ.ஃப்.சி வங்கி மற்றும்/அல்லது பொருந்தக்கூடிய சட்டம் அனுமதித்தால், ஏ.டி.எம். களில் பணம் எடுக்கும் பரிவர்த்தனைகளை செயப்படுத்துவதற்காக வழங்கப்பட்ட தனிப்பட்ட அடையாள எண் (**ஏ.டி.எம். பின்**) (கார்டு பின் மற்றும் ஏ.டி.எம் பின் ஆகியவை இனிமேல் கூட்டாக "**பின்**" என்று குறிப்பிடப்படும்) தேவை என்பதையும் கார்டுதாரர் ஏற்றுக் கொண்டு, ஒப்புக் கொள்கிறார்). கார்டுதாரரிடம் மட்டுமே பின் (பின் எண்) வழங்கப்படும். கார்டுதாரர் பின் எண்களை இரகசியமாகவும் நன்கு பாதுகாப்பாகவும் வைத்திருக்க வேண்டும். எச்.டி.எ.ஃப்.சி வங்கியின் பணியாளர்கள் மற்றும் பிரதிநிதிகள் உட்பட, யாரிடமும் அதைத் தெரிவிக்கக் கூடாது. கார்டுதாரர் ஏதேனும் மூன்றாம் தரப்பினரிடம் பின் எண்களைத் தெரிவிப்பதன் விளைவாக மற்றும்/அல்லது பின் எண்களை அறிந்து கொண்ட ஒருவர் ப்ரீபெய்டு கார்டை தவறாகப் பயன்படுத்துவதன் விளைவாக கார்டுதாரருக்கு ஏதேனும் இழப்பு ஏற்பட்டால், எச்.டி.எ.ஃப்.சி வங்கி எந்த வகையிலும் பொறுப்பேற்காது. எந்த நேரத்திலும், எச்.டி.எ.ஃப்.சி வங்கி பரிவர்த்தனைகளை அங்கீகரிப்பதற்கான பிற தொழில்நுட்பங்களைப் பின்பற்றுமாறு கார்டுதாரரை வங்கி கோரலாம் என்பதையும், இது தொடர்பாக எச்.டி.எ.ஃப்.சி வங்கி கோரும் அனைத்து நடவடிக்கைகள், செயல்கள் மற்றும் விஷயங்களைச் செய்யவும் கார்டுதாரர் ஒப்புக் கொண்டு, ஏற்றுக் கொள்கிறா.

6.4 கார்டுதாரர் பின்வருவனவற்றை உறுதி செய்ய வேண்டும்:

(a) ப்ரீபெய்டு கார்டு பாதுகாப்பான இடத்தில் வைக்கப்படும்;

(b) ப்ரீபெய்டு கார்டை கார்டுதாரரைத் தவிர வேறு எந்த நபரும் பயன்படுத்த அனுமதிக்கப்படாது;

(c) ப்ரீபெய்டு கார்டு கிடைத்தவுடன், உடனடியாக அதன் பின்பக்கத்தில் கையொப்பமிடப்படும்;

(d) ஒருபோதும் யாருக்கும் பின்னை. தெரிவிக்கவோ அல்லது வேறு எவரேனும் அதைக் கண்டுபிடிக்கக்கூடிய இடத்தில் எழுதவோ படாது;

(e) ஹோட்டல்களில் செக்-இன் செய்யும்போதும், வாங்குதல் பரிவர்த்தனை அல்லது சேவை முடியும் முன்பே பணம் செலுத்த வேண்டிய பிற இடங்களிலும் இந்த ப்ரீபெய்டு கார்டைப் பயன்படுத்தக் கூடாது. எந்தவொரு அஞ்சல் ஆர்டர் / தொலைபேசி ஆர்டர் வாங்குதல்களுக்கும் இந்த ப்ரீபெய்டு கார்டைப் பயன்படுத்தக் கூடாது;

(f) விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் ப்ரீபெய்டு கார்டு/ பின்(கள்) டெலிவரி செய்யப்பட்டவுடன், ப்ரீபெய்டு கார்டு ஏதேனும் விதத்தில் தவறாகப் பயன்படுத்தப்பட்டால், அதற்கான பொறுப்பு கார்டுதாரரையே சாரும், எச்.டி.எஃப்.சி வங்கியை அல்ல.

6.5 அவ்வப்போது, எச்.டி.எஃப்.சி வங்கி தனது உள் கொள்கையின்படி, குறிப்பிட்ட நாளில் அல்லது வேறு ஏதேனும் கால இடைவெளியில் செய்யக்கூடிய பரிவர்த்தனைகளின் அளவிற்குபண அளவுகோல்கள்/ வரம்புகளை ஒதுக்கீடு செய்யலாம் என்பதை கார்டுதாரர் ஒப்புக் கொண்டு, ஏற்றுக் கொள்கிறார். அந்த வரம்புகளைத் தாண்டியவுடன், முன்னர் அந்த வரம்புகள் பற்றி கார்டுதாரருக்குத் தெரிவிக்கப்பட்டிருந்தாலும் இல்லாவிட்டாலும், எந்தவொரு பரிவர்த்தனையையும் செயல்படுத்த மறுக்கும் உரிமை வங்கிக்கு உள்ளது என்பதை கார்டுதாரர் ஒப்புக் கொண்டு ஏற்றுக் கொள்கிறார். அவ்வப்போது எச்.டி.எஃப்.சி வங்கி கேட்கும் விவரங்களை வழங்குவதன் மூலம் கார்டுதாரர் பயனாளிகளைப் பதிவு செய்யலாம் மற்றும் எச்.டி.எஃப்.சி வங்கி அவ்வப்போது நிர்ணயிக்கும் விதத்தில், பொருந்தக்கூடிய

சட்டம் மற்றும் எச்.டி.எ்ப்.சி வங்கியின் உள் கொள்கைகள் மற்றும் நடைமுறைகளுக்கு உட்பட்டு, ப்ரீபெய்டு கார்டில் தங்கள் சொந்த நிதி பரிமாற்ற வரம்புகளை நிர்ணயிக்கலாம்.

6.6 தனியான பரிவர்த்தனை மூலம் அல்லது தொடர்ச்சியான பரிவர்த்தனைகள் மூலம், கார்டில் இருக்கும் இருப்பைத் தாண்டுவதற்கு கார்டுதாரருக்கு அனுமதி இல்லை. கார்டு இருப்பை விட செலுத்த வேண்டிய தொகை அதிகமாக இருக்கும் பரிவர்த்தனையை மேற்கொள்ள கார்டுதாரர் முயற்சி செய்தாலும், கார்டுதாரரால் அவ்வாறு செய்ய முடியாது என்பதை கார்டுதாரர் ஒப்புக்கொள்கிறார். எந்தவொரு சூழ்நிலையிலும், எந்தவொரு காரணத்திற்காகவும், கார்டு இருப்பை விட அதிகமான தொகையைக் கொண்ட பரிவர்த்தனை ஏற்றுக்கொள்ளப்பட்டு, அதன் விளைவாக கார்டில் எதிர்மறை மதிப்பில் இருப்பு இருக்கும் பட்சத்தில், அந்த எதிர்மறை கார்டு இருப்புத் தொகைக்கு எச்.டி.எ்ப்.சி வங்கிக்கு கார்டுதாரர் முழுமையாகப் பொறுப்பேற்க வேண்டும் என்பதுடன், கார்டில் இருப்பு எதிர்மறை மதிப்பில் இருக்கத் தொடங்கிய தேதியிலிருந்து அந்தப் பணத்தை உண்மையில் செலுத்தும் தேதி வரை, அவ்வப்போது எச்.டி.எ்ப்.சி வங்கி நிர்ணயிக்கும் வட்டி விகிதங்களின்படி வட்டியுடன் உடனடியாக எச்.டி.எ்ப்.சி வங்கிக்கு செலுத்த வேண்டும்.

6.7 மேற்கொள்ளப்படும் எந்தப் பரிவர்த்தனையும்,அந்தப் பரிவர்த்தனைக்கு பதிவு செய்யப்பட்ட கட்டணம் உண்மையில் கார்டுதாரர் ப்ரீபெய்டு கார்டைப் பயன்படுத்தி செய்தது என்பதற்கான உறுதியான சான்றாக இருக்கும்.

6.8 ஒவ்வொரு வாங்குதலுக்கும்,கார்டுதாரர், வணிகர் இருப்பிடம்/ இணையதளத்தில் ஒரு முறை மட்டுமே ப்ரீபெய்டு கார்டைப் பயன்படுத்துவதை உறுதி செய்ய வேண்டும். வணிக நிறுவனத்திடமிருந்து பெறப்பட்ட எந்தவொரு கட்டணமோ அல்லது பிற பேமெண்ட் கோரிக்கையோ, பதிவு செய்யப்பட்ட கட்டணம் கார்டுதாரரால் முறையாகச் செலுத்தப்பட்டது என்பதற்கான

உறுதியான சான்றாக இருக்கும், ப்ரீபெய்டு கார்டு தொலைந்து போயிருந்தால், திருடப்பட்டிருந்தால் அல்லது மோசடியாக தவறாகப் பயன்படுத்தப்பட்டிருந்தால் தவிர, அதற்கான சானறு வழங்க வேண்டிய சுமை கார்டுதாரரையே சேரும்.

6.9 வணிகர்கள்/ சாதனங்களில் ஏற்படும் பிழை அல்லது தகவல் தொடர்பு இணைப்பில் ஏற்படும் பிழை காரணமாக ஏற்படும் அனைத்து ரீஃபண்டுகளும், சரிசெய்தல்களும் கைமுறையாகச் செயல்படுத்தப்பட்டு, உரிய சரிபார்ப்புக்குப் பிறகும், சம்பந்தப்பட்ட கார்டுநெட்வொர்க்கிற்குப் பொருந்தக் கூடிய விதிகள் மற்றும் விதிமுறைகளுக்கு இணங்கவும் அந்தக் கணக்கில் வரவு வைக்கப்படும். இந்த நேரத்தில் செய்யப்படும் எந்தவொரு பற்றுகளும், இந்த ரீஃபண்டை கணக்கில் எடுத்துக் கொள்ளாமல், ப்ரீபெய்டு கார்டில் உள்ள இருப்பின் அடிப்படையில் மட்டுமே மதிக்கப்படும் என்பதை கார்டுதாரர் ஒப்புக் கொள்கிறார்.

6.10 தரம், மதிப்பு உத்தரவாதம், டெலிவரியில் தாமதம், டெலிவரி செய்யப்படாமை, எந்தவொரு பொருட்கள் அல்லது சேவைகள் கிடைக்கப் பெறாமல் இருத்தல் உட்பட, கார்டுதாரர் வாங்கும் பொருட்கள் மற்றும் சேவைகள் தொடர்பான எந்தவொரு சர்ச்சைக்கும் எச்.டி.எஃப்.சி வங்கி எந்த வகையிலும் பொறுப்பேற்காது. ப்ரீபெய்டு கார்டு என்பது கார்டுதாரர் வசதிகளைப் பெறுவதற்கான ஒரு வசதி மட்டுமே என்பதை தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். பொருட்கள் அல்லது சேவைகள் தொடர்பாக தரம், அளவு, மதிப்பு, டெலிவரி ஆகிவற்றுக்கு அல்லது வேறு ஏதேனும் உத்தரவாதத்தை எச்.டி.எஃப்.சி வங்கி வழங்கவில்லை அல்லது எந்த பிரதிநிதித்துவத்தையும் வழங்கவில்லை. அத்தகைய ஏதேனும் சர்ச்சைகளை நேரடியாக கார்டுதாரர் வணிகருடன் தீர்த்துக் கொள்ள வேண்டும்.

## 7. திருடப்பட்ட அல்லது தொலைந்து போன ப்ரீபெய்டு கார்டு

7.1 ப்ரீபெய்டு கார்டு தொலைந்து போனாலோ அல்லது திருடப்பட்டாலோ, உடனடியாக தொலைபேசி மூலம் வாடிக்கையாளர் சேவையிடம் அந்த இழப்பு/திருட்டு குறித்து கார்டுதாரர் தெரிவிக்க

வேண்டும். அவ்வாறு தெரிவிக்கப்படும் எந்தவொரு அறிவிப்பையும்) பெற்றவுடன், கார்டுதாரரின் போதுமான சரிபார்ப்பின் அடிப்படையில், வேலை நாளின் வேலை நேரத்தின் போது ப்ரீபெய்டு கார்டை எச்.டி.எஃப்.சி வங்கி ஹாட்லிஸ்ட் செய்யும்/ரத்து செய்யும்/ இடைநிறுத்தும்/ தடை செய்யும் மற்றும் அது தொடர்பான அனைத்து வசதிகளையும் நிறுத்தும். இது தொடர்பாக கார்டுதாரருக்கு ஏற்படும் எந்தவொரு அசௌகரியத்திற்கும் வங்கி பொறுப்பேற்காது. ப்ரீபெய்டு கார்டு தொலைந்து போனால் /திருடப்பட்டால், அதைப் பற்றி தெரிவித்து, கார்டுதாரரின் போதுமான சரிபார்ப்பின் அடிப்படையில், அது முடக்கப்படும் /ஹாட்லிஸ்ட் செய்யப்படும் வரை, ப்ரீபெய்டு கார்டில் ஏற்படும் அனைத்து கட்டணங்களுக்கும் கார்டுதாரரே பொறுப்பாவார். மேலும், மேற்கூறிய வழிமுறைகளைப் பின்பற்றப்படவில்லை என்று எச்.டி.எஃப்.சி வங்கி தீர்மானிக்கும் பட்சத்தில், தொலைந்து போன அல்லது ப்ரீபெய்டு கார்டு தொடர்பான நிதிப் பொறுப்பு முற்றிலும் கார்டுதாரரையே சேரும். ப்ரீபெய்டு கார்டில் மேற்கொள்ளப்பட்ட பரிவர்த்தனை(கள்) புகாரளிக்கும் நேரம் அல்லது தொலைந்து போன/திருடப்பட்ட ப்ரீபெய்டு கார்டின் வேறு ஏதேனும் விஷயம் தொடர்பான ஏதேனும் சர்ச்சை ஏற்பட்டால், எச்.டி.எஃப்.சி வங்கியின் முடிவே இறுதியானதாகவும், கார்டுதாரரைக் கட்டுப்படுத்துவதாகவும் இருக்கும்.

## 8. ப்ரீபெய்டு கார்டை ஒப்படைத்தல்

8.1 செல்லுபடியாகும் காலம் முடிவதற்கு முந்தைய நேரம் உட்பட, எந்த நேரத்திலும் ப்ரீபெய்டு கார்டை ஒப்படைக்குமாறு கேட்கும் உரிமை எச்.டி.எஃப்.சி வங்கிக்கு உள்ளது என்பதை கார்டுதாரர் ஒப்புக்கொள்கிறார். அவ்வாறு கேட்கப்பட்டவுடன், எச்.டி.எஃப்.சி வங்கி வழங்கும் அறிவுறுத்தல்களுக்கேற்ப சம்பந்தப்பட்ட ப்ரீபெய்டு கார்டை கார்டுதாரர் ஒப்படைக்க வேண்டும்.

8.2 ஏதேனும் கார்டுதாரர் மரணமடையும் பட்சத்தில், அதைத் தெரிவித்தவுடன் ப்ரீபெய்டு கார்டை எச்.டி.எஃப்.சி வங்கி ரத்து செய்யும்.

## 9. செல்லுபடியாகும் காலம்

9.1 கீழ்க்கானும் பிரிவு 9.2 க்கு உட்பட்டு, ப்ரீபெய்டு கார்டுகள் வழங்கப்பட்ட நாளிலிருந்து 5 (ஐந்து) ஆண்டுகளுக்கு அவை செல்லுபடியாகும்.

9.2 இங்கே முரண்பாடாக எதுவம் இடம்பெற்றிருந்தாலும் கூட, எந்த நேரத்திலும், கார்டுதாரர் மற்றும்/அல்லது விண்ணப்பதாரருக்கு அறிவிப்புடன் அல்லது இல்லாமல், எச்.டி.எ.ஃப்.சி வங்கி தனது சுயாதீன விருப்புரிமையின் கீழ், ப்ரீபெய்டு கார்டை நிறுத்த / செயலிழக்கச் செய்வதற்கான உரிமை அதற்கு உள்ளது.

9.3 ப்ரீபெய்டு கார்டை ஒப்படைக்குமாறு கேட்கப்படுவதன் பேரில், எச்.டி.எ.ஃப்.சி வங்கி அல்லது அதன் பிரதிநிதியிடம் ஒப்படைக்க கார்டுதாரர் ஒப்புக்கொள்கிறார். மேலும் ப்ரீபெய்டு கார்டை நிறுத்திய பிறகு / செயலிழக்கச் செய்த பிறகு ப்ரீபெய்டு கார்டைப் பயன்படுத்தவோ அல்லது பயன்படுத்த முயற்சிக்கவோ மாட்டார்.

9.4 கார்டுதாரர் எந்த நேரத்திலும், வாடிக்கையாளர் சேவையைத் தொடர்புகொண்டு, எச்.டி.எ.ஃப்.சி வங்கியின் கொள்கைகள் மற்றும் வழிகாட்டுதல்களுக்கு ஏற்ப தேவைப்படும் ஆவணங்களைச் சமர்ப்பிப்பதன் மூலம் ப்ரீபெய்டு கார்டை செயலிழக்கச் செய்யுமாறு கோரலாம். பரிமாற்றம் பொருந்தக்கூடிய சட்டம் மற்றும் எச்.டி.எ.ஃப்.சி வங்கியின் உள்ளகக் கொள்கைகள் மற்றும் நடைமுறைகளுக்கு உட்பட்டுசெய்யப்படும் பட்சத்தில், கார்டை செயலிழக்க செய்த / காலாவதியான பிறகு, அதில் உள்ள தொகையை மாற்ற வேண்டிய கார்டுதாரரின் கணக்கு/ ப்ரீபெய்டு கார்டு விவரங்களையும் வழங்கலாம்.

9.5 இந்திய ரிசர்வ் வங்கி வழிகாட்டுதளுக்கேற்ப, எந்தவொரு கோரப்படாத இருப்புத் தொகையும் வைப்புத்தொகையாளர் கல்வி மற்றும் விழிப்புணர்வு நிதித் திட்டத்திற்கு மாற்றப்படும் என்பதை கார்டுதாரர் ஒப்புக் கொண்டு, உறுதிப்படுத்துகிறார்.

10. **அறிக்கைகள் மற்றும் பதிவுகள்**

10.1 ப்ரீபெய்ட் கார்டு / பரிவர்த்தனைகள் தொடர்பாக (இந்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கேற்ப மேற்கொள்ளப்பட்ட அல்லது பெறப்பட்ட பேமெண்ட்களின் விவரங்கள் உட்பட, ஆனால் அவை மட்டுமே அல்லாமல்) எச்.டி.எ.ஃப்.சி வங்கி பராமரிக்கும் அனைத்து பதிவுகளும், கார்டுதாரர் மற்றும் விண்ணப்பதாரருக்கு எதிரான, இறுதியான ஆதாரமாகக் கருதப்படும்.

10.2 எந்தவொரு பரிவர்த்தனை தொடர்பாகவும் எந்தவொரு கார்டுதாரருக்கும் பரிவர்த்தனை ஸ்லிப்கள் மற்றும்/அல்லது ப்ரீபெய்டு கார்டு தொடர்பான எந்தவொரு அறிக்கைகளின் நகல்களையும் வழங்குவது எச்.டி.எ.ஃப்.சி வங்கியின் பொறுப்பல்ல என்பதுடன், கார்டுதாரர் எச்.டி.எ.ஃப்.சி வங்கியில் பதிவுசெய்துள்ள மொபைல் எண்ணில் குறுஞ்செய்தி சேவை செய்தி மூலமாகவோ அல்லது எச்.டி.எ.ஃப்.சி வங்கியில் கார்டுதாரர் பதிவுசெய்த மின்னஞ்சல் முகவரியில் இமெயில் மூலமாகவோ மட்டுமே அவர் எச்சரிக்கைகளைப் பெறுவார்.

10.3 இதன்மூலம் கார்டுதாரர் ப்ரீபெய்டு கார்டு தொடர்பான அறிக்கைகளைப் பெற மாட்டார் என்பதை ஒப்புக்கொள்கிறார். ப்ரீபெய்டு கார்டு தொடர்பான அறிக்கைகளை மின்னஞ்சல் மூலம் பெறுவதற்கு கார்டுதாரர் விரும்பும் பட்சத்தில், அந்த அறிக்கைகள் பதிவுசெய்யப்பட்ட மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பப்படும்போது எந்தவொரு இரகசிய மீறலுக்கும் எச்.டி.எ.ஃப்.சி வங்கி பொறுப்பாகாது அல்லது பொறுப்பேற்காது என்பதை இதன் மூலம் கார்டுதாரர் ஒப்புக் கொள்கிறார். தான் பெறும் மின்னஞ்சல்களின் நம்பகத்தன்மையை கார்டுதாரர் சரிபார்க்க வேண்டும். மோசடியாளர்கள்/ ஏமாற்றுக்காரர்களிடமிருந்து கிடைக்கும் எந்தவொரு அறிக்கைக்கும் எச்.டி.எ.ஃப்.சி வங்கியை கார்டுதாரர் மற்றும்/அல்லது விண்ணப்பதாரர் பொறுப்பாக்க மாட்டார். எச்.டி.எ.ஃப்.சி வங்கியிடமிருந்து அறிக்கைகளைப் பெறுவதால் கார்டுதாரரின் கணினி நெட்வொர்க்கில்

ஏதேனும் சிக்கல் ஏற்பட்டால் அதற்கு எச்.டி.எ.ஃப்.சி வங்கியை கார்டுதாரர் மற்றும்/அல்லது விண்ணப்பதாரர் பொறுப்பாக்க மாட்டார். எச்.டி.எ.ஃப்.சி வங்கிக்கு வழங்கப்பட்ட தகவலில் ஏதேனும் மாற்றம் இருந்தால், கார்டுதாரர் எச்.டி.எ.ஃப்.சி வங்கிக்கு எழுத்துப்பூர்வமாகத் தெரிவிக்க வேண்டும். தவறான மின்னஞ்சல் முகவரி மற்றும் தொழில்நுட்ப காரணங்களால் கார்டுதாரருக்கு அறிக்கைகள் கிடைக்கவில்லை என்றால், அதற்கு எச்.டி.எ.ஃப்.சி வங்கி பொறுப்பேற்காது.

11. **இழப்பீடு வழங்கும் பொறுப்பில் இருந்து விடுவித்தல்**

11.1 எச்.டி.எ.ஃப்.சி வங்கி கார்டுதாரருக்கு ப்ரீபெய்டு கார்டை வழங்குவதைக் கவனத்தில் எடுத்துக் கொண்டு, எச்.டி.எ.ஃப்.சி வங்கி மற்றும் அதன் அதிகாரிகள், இயக்குநர்கள், பணியாளர்கள், பங்குதாரர்கள், முகவர்கள், ஆலோசகர்கள் மற்றும் பிற பிரதிநிதிகள் ப்ரீபெய்டு கார்டுகளை வழங்குவதன் விளைவாகவோ அல்லது காரணமாகவோ அல்லது அதனால் எழும் எந்தவொரு நடவடிக்கைக்கள், உரிமைக்கோரல்கள், வழக்குகள், கோரிக்கைகள், நடவடிக்கைகள், இழப்புகள், சேதங்கள், தனிப்பட்ட காயம், செலவுகள், கட்டணங்கள் மற்றும் செலவுகளுக்கு இழப்பீடு வழங்குகின்ற் பொறுப்பில் இருந்து எச்.டி.எ.ஃப்.சி வங்கி மற்றும் அதன் அதிகாரிகள், இயக்குநர்கள், ஊழியர்கள், பங்குதாரர்கள், முகவர்கள், ஆலோசகர்கள் மற்றும் பிற பிரதிநிதிகளுக்கு விலக்கு அளிக்க, காப்பாற்ற, பாதுகாக்க மற்றும் பாதிப்பில்லாததாக வைத்திருக்க கார்டுதாரரும் விண்ணப்பதாரரும் இதன் மூலம் வெளிப்படையாகவும், சந்தேகத்திற்கு இடமின்றியும் ஒப்புக் கொள்கிறார்கள். அதற்கான சூழ்நிலைகள் பின்வருமாறு: (a) கார்டுதாரர் மற்றும்/அல்லது விண்ணப்பதாரரின் அலட்சியம், தவறு அல்லது தவறான நடத்தை; (b) கார்டுதாரர் தவறாகப் பிரதிநிதித்துவப்படுத்துதல் அல்லது கார்டுதாரர் மற்றும்/அல்லது விண்ணப்பதாரர் இந்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் அல்லது ஏதேனும் பொருந்தக்கூடிய சட்டத்தை மீறுவது அல்லது இணங்காதது; (c) ப்ரீபெய்ட் கார்டை வழங்குதல்/பயன்படுத்துதல் மற்றும்/அல்லது ஏதேனும் பரிவர்த்தனை தொடர்பாக அல்லது தொடர்பாக எச்.டி.எ.ஃப்.சி வங்கிக்கு எதிராக எந்தவொரு மூன்றாம் தரப்பினராலும் மேற்கொள்ளப்பட்ட அல்லது தொடரப்பட்ட எந்தவொரு உரிமைகோரலும் அல்லது நடவடிக்கையும்; (d) கார்டுதாரர் மற்றும்/அல்லது விண்ணப்பதாரரின் அறிவுறுத்தல்களின் பேரில் எச்.டி.எ.ஃப்.சி வங்கி, அதன் அதிகாரிகள், பணியாளர்கள் அல்லது முகவர்களால் எடுக்கப்பட்ட அல்லது எடுக்கப்படாமல் விடப்பட்ட எந்தவொரு நடவடிக்கையும்; மற்றும்/அல்லது (e)

கார்டுதாரரின் ஏதேனும் பரிவர்த்தனையில் மோசடி அல்லது நேர்மையின்மை.

## 12. பொறுப்பிலிருந்து விலக்களித்தல்

12.1 இந்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் வேறு எந்த விதிகளுக்கும் முரண்பாடு கொள்ளாமல், பின்வருவன மூலம் ஏற்படும் ஏதேனும் சேதம் அல்லது இழப்பு உட்பட, ஆனால் அவை மட்டுமே அல்லாமல் இந்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் தொடர்பாக நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஏற்படும் எந்தவொரு இழப்பு அல்லது சேதம் எதுவாயினும் அதற்காக கார்டுதாரருக்கு எச்.டி.எஃப்.சி வங்கி பொறுப்பேற்காது: (a) ஏதேனும் நபர் இந்த ப்ரீபெய்டு கார்டை மதிக்கவோ அல்லது ஏற்றுக்கொள்ளவோ மறுத்தல்; (b) ப்ரீபெய்டு கார்டை ஒப்படைக்கும் நேரத்தில், எச்.டி.எஃப்.சி வங்கியின் பிரதிநிதியைத் தவிர, கார்டுதாரர் வேறு ஏதேனும் நபரிடம் இந்த ப்ரீபெய்டு கார்டைத் தருதல்; (c) கார்டுதாரரின் ப்ரீபெய்டு கார்டை அணுகுவதில் மற்றும்/அல்லது பயன்படுத்துவதில் ஏதேனும் தடங்கல் அல்லது நிறுத்தம்.

## 13. கட்டணங்கள்

13.1 ப்ரீபெய்டு கார்டைப் பயன்படுத்துவதற்கான கட்டணங்கள் மற்றும் பிற கட்டணங்களை எச்.டி.எஃப்.சி வங்கி விதிக்க உரிமை உண்டு, இந்தக் கட்டணங்கள் எச்.டி.எஃப்.சி வங்கியின் இணையதளத்தில் அவ்வப்போது கார்டுதாரர் மற்றும் விண்ணப்பதாரருக்கு எச்.டி.எஃப்.சி வங்கியால் நிர்ணயிக்கப்படும். இதன் மூலம் அந்தக் கட்டணங்களைச் செலுத்துவதற்கு கார்டுதாரரும் விண்ணப்பதாரரும் ஒப்புக் கொள்கிறார்கள்.

13.2 ப்ரீபெய்டு கார்டைப் பயன்படுத்துதற்கு செலுத்த வேண்டிய ஏதேனும் வரிகள், அரசு கட்டணங்கள், வரி அல்லது பற்றுகளை கார்டுதாரர்/ விண்ணப்பதாரர் மட்டுமே ஏற்க வேண்டும் என்பதுடன், அது எச்.டி.எஃப்.சி வங்கியின் மீது (நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ) விதிக்கப்பட்டால், கார்டுதாரர்/ விண்ணப்பதாரர் அந்தக் கட்டணங்களை செலுத்தவும்/ அல்லது வங்கிக்கு ஈடு செய்யவும் /செலுத்தவும் இதன் மூலம் ஒப்புக் கொள்கிறார்.

13.3 கார்டுதாரர்/ விண்ணப்பதாரரின் கார்டு மற்றும் அதைப் பயன்படுத்துவதற்காக செலுத்த வேண்டிய கட்டணங்கள், கட்டணவ விதிப்புகள், வரிகள் அல்லது தீர்வைகளை செலுத்த வேண்டிய கடமைக்கு பாரபட்சம் இல்லாமல், மேற்கண்ட பிரிவு 13.1 மற்றும் பிரிவு 13.2 இன் படி செலுத்த வேண்டிய தொகைகள், கிடைக்கக்கூடிய கார்டு இருப்பை டெபிட் செய்வதன் மூலம் மற்றும்/அல்லது கணக்கு மற்றும்/அல்லது கார்டுதாரர்/ விண்ணப்பதாரரின் வேறு எந்த கணக்கிலிருந்தும் செலுத்த வேண்டிய தொகைகளை டெபிட் செய்வதன் மூலம் உட்பட, கார்டுதாரர்/ விண்ணப்பதாரரிடமிருந்து எச்.டி.எஃப்.சி வங்கிக்கு செலுத்த வேண்டிய அனைத்துத் தொகைகளையும் மீட்டெடுக்க எச்.டி.எஃப்.சி வங்கிக்கு,உரிமை உண்டு.

14. **சர்ச்சைகள்**

14.1 தரம், மதிப்பு, உத்தரவாதம், டெலிவரி தாமதம், டெலிவரி செய்யாதது, எந்தவொரு பொருட்கள் அல்லது சேவைகளையும் பெறாதது உட்பட, ப்ரீபெய்ட் கார்டு மூலம் கார்டுதாரர் வாங்கும் பொருட்கள் மற்றும் சேவைகள் தொடர்பான எந்தவொரு சர்ச்சைகளுக்கும் எச்.டி.எஃப்.சி வங்கி எந்த வகையிலும் பொறுப்பேற்காது, ப்ரீபெய்ட் கார்டு என்பது கார்டுதாரர் வணிகர்களுக்கு பணம் செலுத்துவதற்கான ஒரு வழியாகும். கார்டுதாரர் வாங்கிய பொருட்கள் அல்லது சேவை தொடர்பாக, எந்தவொரு காரணத்திற்காகவும் எழும் எந்தவொரு சர்ச்சையையும் கார்டுதாரர் நேரடியாக வணிகருடன் தீர்த்துக் கொள்ள வேண்டும் என்பதுடன், இது தொடர்பாக எச்.டி.எஃப்.சி வங்கிக்கு எந்தக் கடமையும் பொறுப்பும் இல்லை.

14.2 பின்வரும் காரணங்களால் கார்டுதாரருக்கு மற்றும் விண்ணப்பதாரருக்குக்கு நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஏற்படும் எந்தவொரு இழப்பு அல்லது சேதத்திற்கும் எச்.டி.எஃப்.சி வஞ்சி பொறுப்பாகாது: (a) கார்டுதாரரின்/ விண்ணப்பதாரரின் மொபைல் எண்ணை அங்கீகரிக்கப்படாத முறையில் பயன்படுத்துதல்; (b) எச்.டி.எஃப்.சி வங்கியின் அனைத்து அல்லது ஏதேனும் எச்சரிக்கைகள் மீதும் செயல்படத் தவறுதல், தாமதம் அல்லது

இயலாமை; (c) பரிமாற்றத்தில் ஏதேனும் தகவல்/அறிவுறுத்தல்கள்/எச்சரிக்கைகள் இழப்பு; (d) வேறு எந்த நபராலும் அங்கீகரிக்கப்படாத அணுகல் அல்லது நான் வழங்கிய ஏதேனும் தகவல்/அறிவுறுத்தல்கள் அல்லது இரகசியத்தன்மை மீறல்.

14.3 ஏதேனும் முறைகேடுகள் அல்லது முரண்பாடுகள் அல்லது கார்டுதாரருக்கு பரிவர்த்தனை தொடர்பாக ஏதேனும் கேள்வி அல்லது புகார் உள்ள எந்தவொரு பரிவர்த்தனையும் நடந்த 45 (நாற்பத்தைந்து) நாட்களுக்குள், , வாடிக்கையாளர் சேவையைத் தொடர்புகொள்வதன் மூலம் கார்டுதாரர் எச்.டி.எஃப்.சி வங்கிக்குத் தெரிவிக்க வேண்டும். எந்தவொரு பரிவர்த்தனையும் நடந்த 45 (நாற்பத்தைந்து) நாட்களுக்குள் எச்.டி.எஃப்.சி வங்கிக்கு எந்த முரண்பாடான தகவலும் கிடைக்கவில்லை என்றால், சம்பந்தப்பட்ட பரிவர்த்தனைகளை எந்த முறைகேடு/முரண்பாடும் இல்லாமல் செய்யப்பட்டவை என்று கருதி, தொடர்வதற்கு வங்கிக்கு உரிமை உள்ளது.

14.4 இந்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் குறித்து கார்டுதாரர் மற்றும்/அல்லது விண்ணப்பதார் ஏதேனும் புகார்கள்/கேள்விகள் எழுப்பினால், கார்டுதாரர் மற்றும்/அல்லது விண்ணப்பதாரர் எச்.டி.எஃப்.சி வங்கிக்குத் தேவைப்படும் அனைத்து தகவல்களையும் ஆவணங்களையும் உடனடியாக எச்.டி.எஃப்.சி வங்கிக்கு வழங்க வேண்டும்.

14.5 எச்.டி.எஃப்.சி வங்கி தனது வாடிக்கையாளர்களிடம் எந்த இரகசிய விவரங்களையும் கேட்பதில்லை என்பதை நினைவில் கொள்ளவும், எனவே கார்டுதாரர் மற்றும்/அல்லது விண்ணப்பதாரர் பாஸ்வேர்டுகள், பயனர் ஐடிகள் போன்ற இரகசிமான எந்தத் தகவலையும் தெரிவிக்குமாறு கேட்கும் எந்தவொரு நபருக்கும் தெரிவிக்கக் கூடாது. எங்கள் புகார் நடைமுறை தொடர்பான முழு விவரங்களுக்கு, எச்.டி.எஃப்.சி வங்கி இணையதளத்தைப் பார்க்கவும்.

15. **விவரங்களை வெளியிடுவதற்கான வெளிப்படையான ஒப்புதல்/**

**விலக்களித்தல்**

15.1 கார்டுதாரர் மற்றும்/அல்லது விண்ணப்பதாரரின் அலுவலகம்/ குடியிருப்பில் கார்டுதாரர் மற்றும்/அல்லது விண்ணப்பதாரரின், எந்தவொரு தகவலையும் அல்லது வேறுவிதமாக எச்.டி.எஃப்.சி வங்கி மற்றும்/அல்லது அதன் கூட்டாளர்கள் சரிபார்க்க அல்லது கார்டுதாரர் (மற்றும்/அல்லது விண்ணப்பதாரரின்)/ கார்டுதாரரின் முதலாளி (மற்றும்/அல்லது விண்ணப்பதாரரின் முதலாளி)/ வங்கியாளர்/ கடன் பணியகங்கள்/ ஆர்பிஐ அல்லது வேறு எந்த மூலத்தையும் தொடர்பு கொண்டு உறுப்பினர் தேவைகளை உறுதிப்படுத்த அல்லது கார்டுதாரர்/விண்ணப்பதாரரின் கணக்கை நல்ல கடன் நிலையில் பராமரிக்க தேவையான எந்தவொரு தகவலையும் பெற அல்லது வழங்க மற்றும் பராமரிக்க இதன் மூலம் கார்டுதாரர் மற்றும்/அல்லது விண்ணப்பதாரர் அங்கீகாரம் அளிக்கிறார்.

15.2 இங்கே ஏதேனும் முரணாபாடாக இடம்பெற்று இருந்தாலும் கூட, கார்டுதாரர் மற்றும் விண்ணப்பதாரர் எச்.டி.எஃப்.சி வங்கி (தானாகவோ அல்லது அதன் சேவை வழங்குநர்கள் மூலமாகவோ, தானியங்கி முறையிலோ அல்லது வேறுவிதமாகவோ) கார்டுதாரர் மற்றும்/அல்லது விண்ணப்பதாரர் சமர்ப்பித்த/செயல்படுத்தப்பட்ட ஆவணங்களில் உள்ள எந்தவொரு தகவலையும் மற்றும்/அல்லது கார்டுதாரர் மற்றும்/அல்லது விண்ணப்பதாரர் தொடர்பான வேறு ஏதேனும் தகவலையும் கீழ்க்கண்டவற்றில் ஏதேனும் ஒன்றைச் செய்ய மற்றும் மேற்கொள்ள கார்டுதாரரும், விண்ணப்பதாரரும் வெளிப்படையாக ஒப்புதல் வழங்கி, அங்கீகரிக்கிறார்கள்: எச்.டி.எஃப்.சி வங்கியால் தற்போது அல்லது இனி சேகரிக்கப்பட்ட ப்ரீபெய்ட் கார்டின் பயன்பாடு தொடர்பான எந்தவொரு தனிப்பட்ட தரவு மற்றும் உணர்திறன் தகவல்கள், கார்டுதாரர் மற்றும்/அல்லது விண்ணப்பதாரர் பற்றிய தகவல்கள், ஆவணங்கள் மற்றும் தரவு, கடன் தகவல் மற்றும் கார்டுதாரர் மற்றும்/அல்லது விண்ணப்பதாரர் பற்றிய வேறு ஏதேனும் தகவல்கள் (கூட்டாக, "தகவல்"):

(a) கார்டுதாரர் மற்றும்/அல்லது விண்ணப்பதாரரிடமிருந்தும், கடன்

தகவல் நிறுவனங்கள், இணையதளங்கள், தரவுத்தளங்கள் மற்றும் ஆன்லைன் தளங்கள் (அரசுடையதாக இருந்தாலும், இல்லாவிட்டாலும்) ஆகியவற்றிலிருந்து அணுகுவது உட்பட, ஆனால் அவை மட்டுமே அல்லாமல், பிற நேரடி அல்லது ஆன்லைன் மூலங்களிலிருந்து தகவல்களைச் சேகரிக்க, ஆன்லைன் தரவுத்தளங்கள் உட்பட எந்தவொரு ஆதாரங்கள் மற்றும் நபர்களிடமிருந்தும் தகவலின் நம்பகத்தன்மை, சரியான தன்மை, போதுமான தன்மை போன்றவற்றைச் சரிபார்க்க; மற்றும் கார்டுதாரர் மற்றும்/அல்லது விண்ணப்பதாரரின் உள்நுழைவு மற்றும் பாஸ்வேர்டைப் பயன்படுத்தி, வரம்பில்லாமல் தகவல்களை அணுகுதல், சேகரித்தல் அல்லது சரிபார்ப்பதற்காக கார்டுதாரர் மற்றும்/அல்லது விண்ணப்பதாரரின் சார்பாகச் செயல்பட; இந்த சேகரிப்பு, அணுகல் மற்றும் சரிபார்ப்பு கார்டுதாரர் மற்றும்/அல்லது விண்ணப்பதாரருக்கு எந்த அறிவிப்பும் வழங்காமல் செய்யப்படலாம்;

(b) எச்.டி.எஃப்.சி வங்கி பொருத்தமானது எனக் கருதும் விதத்தில் தகவல்களைச் சேமித்தல், கட்டமைத்தல், ஒழுங்கமைத்தல், மறு உருவாக்கம் செய்தல், நகலெடுத்தல், பயன்படுத்துதல், விவரக்குறிப்பு செய்தல் போன்றவை உட்பட தகவல்களை செயலாக்குதல்;

(c) ஒப்பந்தத்திற்காக, சட்டப்படி அல்லது எச்.டி.எஃப்.சி வங்கியின் சான்றுகள் மற்றும் உரிமைகோரல் நோக்கங்களுக்காக, எது நீண்ட காலமோ, அதுவரை தகவலைச் சேமிக்க;

(d) கார்டுதாரர் மற்றும்/அல்லது விண்ணப்பதாரருக்கு எந்த அறிவிப்பும் வழங்காமல், எச்டிஎஃப்சி வங்கி பொருத்தமாகக் கருதக்கூடிய நோக்கங்களுக்காக, எச்டிஎஃப்சி வங்கியின் எந்தவொரு கிளை, பெற்றோர்/துணை நிறுவனம், இணைப்பு நிறுவனம், குழு நிறுவனங்கள் மற்றும் கூட்டாளர்கள், அரசு/ஒழுங்குமுறை ஆணையம், சேவை வழங்குநர், வணிக

நிருபர், முகவர் அல்லது மூன்றாம் தரப்பு துணை ஒப்பந்ததாரர், ஆலோசகர்கள், கடன் தகவல் நிறுவனங்கள், ஒழுங்குமுறை அதிகாரிகள், விசாரணை நிறுவனங்கள், நீதித்துறை, பகுதியளவு-நீதித்துறை மற்றும் சட்டப்பூர்வ அதிகாரிகள் உள்ளிட்ட, வேறு எந்த நபருக்கும், அவ்வப்போது தகவல்களை வெளியிடுதல், பரிமாற்றம் செய்தல், பகிர்தல் அல்லது பிரித்தல். இதன் மூலம் கார்டுதாரர் தனியுரிமை சலுகையை தள்ளுபடி செய்கிறார்.

15.3 குறைகள் தொடர்பான உரையாடல்கள் அல்லது கட்டண மீட்பு தொடர்பான உரையாடல்கள் அல்லது எச்.டி.எ.ஃப்.சி வங்கி பொருத்தமாகக் கருதும் வேறு ஏதேனும் உரையாடல்கள் மேற்கொள்ளப்படும் போது, கார்டுதாரர் / விண்ணப்பதாரர் அல்லது கார்டுதாரர் / விண்ணப்பதாரரின் பிரதிநிதி மற்றும் எச்.டி.எ.ஃப்.சி வங்கியின் பிரதிநிதி இடையேயான குறிப்பிட்ட உரையாடல்களைப் பதிவு செய்வதற்கு இதன் மூலம் கார்டுதாரரும் விண்ணப்பதாரரும் எச்.டி.எ.ஃப்.சி வங்கிக்கு அங்கீகாரம் அளிக்கின்றனர்.

15.4 எச்.டி.எ.ஃப்.சி வங்கி மற்றும்/அல்லது அதன் முகவர்களிடமிருந்து தொலைபேசி/ மொபைல்/ குறுஞ்செய்தி/ மின்னஞ்சல் அல்லது வேறு ஏதேனும் முறையில் சந்தைப்படுத்தல்/ குறுக்கு விற்பனை நோக்கங்களுக்காக தகவல்/ சேவையைப் பெறுவதற்கு இதன் மூலம் கார்டுதாரரும் விண்ணப்பதாரரும் ஒப்புக் கொள்கிறார்கள். தற்போது கார்டுதாரர் மற்றும்/அல்லது விண்ணப்பதாரரால் பெறப்படாத தயாரிப்புகள் மற்றும் சேவைகள் பற்றிய விளம்பரத் தகவலை தொலைபேசி அழைப்புகள்/ மின்னஞ்சல்கள்/ குறுஞ்செய்தி மூலம் பெற கார்டுதாரர் மற்றும்/அல்லது விண்ணப்பதாரர் விரும்பவில்லை என்றால், எச்.டி.எ.ஃப்.சி வங்கி இணையதளம் அல்லது ஃபோன் பேங்கிங் அல்லது எச்.டி.எ.ஃப்.சி வங்கி வழங்கும் பிற சேனல்கள் மூலம் "அழைக்க வேண்டாம்" சேவைக்கு கார்டுதாரர் மற்றும்/அல்லது விண்ணப்பதாரர் பதிவு செய்யலாம் என்பதை கார்டுதாரறும், விண்ணப்பதாரரும் புரிந்து கொள்கிறார்கள். கார்டுதாரர்/ விண்ணப்பதாரரின் வங்கி உறவை அதிகரிக்கவும், வசதியாகவும் மாற்றுவதற்கு வடிவமைக்கப்பட்ட நிதி தீர்வுகளின் நன்மைகளை

முழுமையாகப் பெறுவதற்கு உதவுவதற்காக, கார்டுதாரர்/ விண்ணப்பதாரர் தற்போது பெற்று வரும் தயாரிப்புகள் மற்றும் சேவைகள் தொடர்பான ஆலோசனை மற்றும் தகவல்களைப் பெறுவதற்கு இந்த சேவை பொருந்தாது என்பதை கார்டுதாரரும் விண்ணப்பதாரரும் ஒப்புக்கொள்கிறார்கள்.

16. **நிர்வகிக்கும் சட்டம் மற்றும் நீதிமன்ற அதிகார வரம்பு**

16.1 இந்த விதிகளின் கட்டமைப்பும், செல்லுபடியாகும் தன்மையும் அனைத்து விதங்களிலும் இந்திய சட்டங்களால் நிர்வகிக்கப்படும்.இந்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளிலிருந்து எழும் எந்தவொரு சட்ட நடவடிக்கை அல்லது நடவடிக்கையும் மும்பையில் உள்ள நீதிமன்றங்கள் அல்லது தீர்ப்பாயங்களுக்கு முன் கொண்டு வரப்படும் என்றும், அந்த நீதிமன்றம் அல்லது தீர்ப்பாயத்தின் அதிகார வரம்பிற்குள் திரும்பப் பெறமுடியாத வகையில் தங்களை சமர்ப்பிக்க வேண்டும் என்றும் கார்டுதாரர் ஒப்புக்கொள்கிறார். இருப்பினும், எச்.டி.எஃப்.சி வங்கி தனதேது சுயாதீன விருப்பத்தின் அடிப்படையில், இந்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளிலிருந்து எழும் எந்தவொரு சட்ட நடவடிக்கை அல்லது நடவடிக்கைகளை வேறு எந்த நீதிமன்றம், தீர்ப்பாயம் அல்லது பிற பொருத்தமான மன்றத்திலும் தொடங்கலாம். அந்த அதிகார வரம்பிற்கும், அந்த சட்ட நடவடிக்கை அல்லது நடவடிக்கைகளுக்கான இடம் மற்றும் அந்த சட்ட நடவடிக்கை அல்லது நடவடிக்கைகள் ஒரு அசௌகரியமான மன்றத்தில் கொண்டு வரப்பட்டுள்ளன என்ற எந்தவொரு புகாருக்கும். கார்டுதாரர் இதன் மூலம் ஒப்புக்கொள்கிறார். கார்டுதாரர் இப்போது அல்லது எதிர்காலத்தில் கொண்டிருக்கக்கூடிய எந்தவொரு ஆட்சேபனையையும் தள்ளுபடி செய்கிறார்.

17. **செட்-ஆஃப் மற்றும் பற்றுரிமை**

17.1 இந்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளில் அல்லது வேறு ஏதேனும் ஆவணம்/ ஏற்பாட்டில் முரணாக எது இருந்தாலும்: (a) இந்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் கீழ் அல்லது வேறு ஏதேனும் கடமை/கடன்/கடன் வசதிகள்/கடன் பெறுதல்கள்/ஆவணங்களின் கீழ், வங்கிக்கு கார்டுதாரரின் மற்றும் விண்ணப்பதாரரின் தற்போதைய மற்றும் எதிர்கால பொறுப்புகள் அனைத்திற்கும், அத்தகைய பொறுப்புகள் தெளிவாக்கப்படுமா, உண்மையானதா அல்லது தொடர்ச்சியானதா, முதன்மையானதா அல்லது பிணையமா அல்லது பல்வேறு

நபர்களுடன் அல்லது கூட்டாக மற்றவர்களுடன், இந்த ஆவணத்தின் கீழ் அல்லது வேறு ஏதேனும் கடமை/ கடன்/ வசதிகள்/ கடன்கள்/ ஆவணத்தின் கீழ், முதன்மை கடனாளியாக மற்றும்/அல்லது உத்தரவாததாரராக மற்றும்/அல்லது வேறு எந்த விதத்திலேனும் (கூட்டாக "**பொறுப்புகள்**"), சட்டம், நடைமுறை, வழக்கம் அல்லது வேறுவிதமாக ஒரு வங்கிச் சேவை வழங்குநர் உரிமை பெற்றிருக்கக்கூடிய எந்தவொரு பொதுவான பற்றுரிமை அல்லது அது போன்ற உரிமையுடன் கூடுதலாக, வங்கிக்கு கார்ப்பரேட் நிறுவனத்தின் தற்போதைய மற்றும் எதிர்கால பங்குகள், தற்போது அல்லது எதிர்காலத்தில் வைத்திருக்கும் பங்குகள், பத்திரங்கள், சொத்து, புத்தகக் கடன்கள், அனைத்து நடப்பு, சேமிப்பு, ஓவர் டிரா஑ப்ட், நிலையான அல்லது பிற வைப்புத்தொகைகள் கணக்குகளிலும் உள்ள அனைத்து பணங்கள், சட்டப்பூர்வமாகவோ அல்லது ஆக்கபூர்வமாகவோ, வங்கியுடன் அல்லது தன் வசத்தில் வைத்திருக்கும் கார்டுதாரரின் அதே அல்லது வேறுபட்ட திறனில், மற்றும் தனித்தனியாகவோ அல்லது கூட்டாகவோ, எந்தவொரு வங்கி உறவுக்காகவோ, பாதுகாப்பான வசபப்படுத்தல், வசூல் அல்லது வேறுவிதமாக ஒரு குறிப்பிட்ட மற்றும் தனிப்பட்ட பற்றுரிமையை கொண்டிருக்கும், மற்றும் (b) தனித்தனியாக, கார்டுதாரருக்கு அறிவிப்பு செய்யாமலும், அவர் அனுமதி இல்லாமலும், அனைத்து கணக்குகளிலும் உள்ள அனைத்துத் தொகைகளையும் (வங்கியின் சுயாதீன விருப்பத்தின் பேரில் முன்கூட்டியே அல்லது முதிர்ச்சியடைந்த பிறகு) செட்-ஆ஑ப், பரிமாற்றுதல், விற்பனை செய்தல், பற்று வைத்தல், சரிசெய்தல், கையகப்படுத்துதல் போன்ற வெளிப்படையான உரிமையை வங்கி கொண்டிருக்கும்). மேற்கூறியவாறு பத்திரங்கள், தொகைகள் மற்றும் சொத்து (ஏதேனும் குறிப்பிட்ட பொறுப்பிற்காக ஒதுக்கப்பட்டிருந்தாலும், இல்லாவிட்டாலும்) எந்தப் பொறுப்புகளுக்காகவும் ஏதேனும் நிலுவைத் தொகை வசூல் செய்வதற்கு அல்லது அதற்கு எதிராக, நிறுவனத்தின் அனைத்து அல்லது ஏதேனும் கணக்குகளையும் இணைக்க அல்லது ஒருங்கிணைக்கவும், அதே வகை அல்லது இயல்புடையதா இல்லையா, அதே திறனில் வைத்திருந்தாலும் இல்லாவிட்டாலும், அத்தகைய ஆவணங்களின் அடிப்படையில் எந்தவொரு பொறுப்புகளின் எந்தப் பகுதியையும் செலுத்துவதில் ஏதேனும் தவறினால் உட்பட எந்தவொரு பணத்தையும் செட்-ஆ஑ப் செய்யும் உரிமையை வங்கி கொண்டிருக்கும்.

18. **மாற்றங்கள் பற்றிய அறிவிப்பு**

18.1 எந்த நேரத்திலும், (a) இந்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளில் ஏதேனும் ஒன்றைத் திருத்தவோ அல்லது கூடுதலாகச் சேர்ப்பதற்கு; மற்றும்/அல்லது (b) கட்டணங்கள் அல்லது விகிதங்களைப் பாதிக்கும் மாற்றங்கள் மற்றும்/அல்லது ப்ரீபெய்டு கார்டின் கட்டணங்களைக் கணக்கிடும் முறை உட்பட, ஆனால் அவை மட்டுமே அல்லாமல் ப்ரீபெய்டு கார்டில் வழங்கப்படும் எந்தவொரு அம்சத்தையம்/அல்லது பலனையும் மாற்றுவதற்கான முழுமையான சுயாதீன விருப்புரிமையை எச்.டி.எஃப்.சி. வங்கி கொண்டிருக்கும். ப்ரீபெய்டு கார்டுக்கான திருத்தப்பட்ட விதிமுறைகள், அதன் அம்சங்களில் செய்யப்பட்ட மாற்றங்கள் மற்றும் ப்ரீபெய்டு கார்டுக்குத் நிறுத்தப்பட்டுள்ள வட்டி, கட்டணங்கள் மற்றும் விகிதங்களை எச்.டி.எப்.சி. வங்கியின் இணையதளம் அல்லது எச்.டி.எப்.சி. வங்கியால் அவ்வப்போது தீர்மானிக்கப்படும் வேறு ஏதேனும் முறையில் வெளியிடுவதன் மூலம் எச்.டி.எப்.சி. வங்கி தெரிவிக்கும் அவ்வப்போது எச்.டி.எப்.சி. வங்கியின் இணையதளத்தில் வெளியிடப்படும் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் சமீபத்திய பதிப்புகளைத் தொடர்ந்து பார்த்துத் தெரிந்து கொள்ள வேண்டியது கார்டுதாரர் மற்றும் விண்ணப்பதாரின் பொறுப்பாகும். திருத்தப்பட்ட விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் எச்.டி.எப்.சி. வங்கியின் இணையதளத்தில் வெளியிடப்பட்ட பிறகும் தொடர்ந்து இந்த ப்ரீபெய்டு கார்டைப் பயன்படுத்தினால், அவர்கள் அந்த திருத்தப்பட்ட விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை ஏற்றுக் கொண்டதாகக் கருதப்படுவார்கள்.

19. இந்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் மற்றும் / அல்லது இந்த ப்ரீபெய்டு கார்டு தொடர்பாக, எச்.டி.எப்.சி. வங்கி பொருத்தமானதாகக் கருதும் வணிகத் தொடர்பாளர்கள் / மூன்றாம் தரப்பு துணை ஒப்பந்ததாரர்கள் / முகவர்கள் / சேவை வழங்குநர்களை அது பயன்படுத்தலாம் என்பதை கார்டுதாரர் மற்றும் விண்ணப்பதாரர் ஒப்புக் கொண்டு, ஏற்றுக் கொள்கிறார்கள் மற்றும் உறுதிப்படுத்துகிறார்கள்.

20. எச்.டி.எப்.சி. வங்கி இணையதளத்தில் (https://www.hdfcbank.com/assets/pdf/Customer-Protection-Policy.pdf) கிடைக்கும் எச்.டி.எப்.சி. வங்கி வாடிக்கையாளர் பாதுகாப்புக் கொள்கையை கார்டுதாரரும், விண்ணப்பதாரரும் படித்துப் புரிந்து கொண்டதாக இதன் மூலம் கார்டுதாரரும், விண்ணப்பதாரரும் ஒப்புக் கொண்டு, ஏற்றுக்

கொள்கிறார்கள் மற்றும் உறுதிப்படுத்துகிறார்கள். இந்த ப்ரீபெய்டு கார்டை, கார்டுதாரரைத் தவிர வேறு ஒருவர் பயன்படுத்துவது உட்பட, ஆனால் அவை மட்டுமே அல்லாமல் ப்ரீபெய்டு கார்டு தொடர்பான அனைத்திற்கும் கட்டுப்படுவதாக ஒப்புக் கொண்டு, ஏற்றுக் கொள்கிறார்கள்.

21. இந்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் எச்.டி.எப்.சி. வங்கிக்கும், கார்டுதாரருக்கும் விண்ணப்பதாரருக்கும் மட்டும் இடையிலானது என்பதையும், இதன் கீழ் வேறு எந்த மூன்றாம் தரப்பினருக்கும் எந்த உரிமைகளோ அல்லது கடமைகளோ இல்லை என்பதையும் கார்டுதாரர் மற்றும் விண்ணப்பதாரர் ஒப்புக் கொண்டு, ஏற்றுக் கொள்கிறார்கள் மற்றும் உறுதிப்படுத்துகிறார்கள்.

22. இந்த ப்ரீபெய்டு கார்டைப் பயன்படுத்துவதன் மூலம் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை கார்டுதாரர் மற்றும் கார்ப்பரேட் நிறுவனம் ஏற்றுக் கொள்கிறார்கள். ப்ரீபெய்டு கார்டை முதல் முறையாகப் பயன்படுத்தும்போது, ப்ரீபெய்டு கார்டு மற்றும் இந்த விதிகளின் பொருள் தொடர்பாக, அந்தச் சூழ்நிலைக்குப் பொருந்தும் வகையில் கார்டு தாரருக்கும் எச்.டி.எப்.சி. வங்கிக்கும் இடையிலான ஒப்பந்தத்தை இந்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் பிரதிநிதித்துவப்படுத்தும்.

23. இந்த ப்ரீபெய்டு கார்டைப் பயன்படுத்துவதன் மூலம் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை கார்டுதாரர் மற்றும் கார்ப்பரேட் நிறுவனம் ஏற்றுக் கொள்கிறார்கள். ப்ரீபெய்டு கார்டை முதல் முறையாகப் பயன்படுத்தும்போது, ப்ரீபெய்டு கார்டு மற்றும் இந்த விதிகளின் பொருள் தொடர்பாக, அந்தச் சூழ்நிலைக்குப் பொருந்தும் வகையில் கார்டு தாரருக்கும் எச்.டி.எப்.சி. வங்கிக்கும் இடையிலான ஒப்பந்தத்தை இந்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் பிரதிநிதித்துவப்படுத்தும்.

**பொறுப்பு துறப்பு: மேலே உள்ள ஆவணம் அசல் ஆங்கில வடிவின் மொழிபெயர்ப்பாகும். இதில் உள்ள விஷயங்களில் ஏதேனும் முரண்பாடு இருந்தால், ஆங்கில வடிவே கருத்தில் எடுத்துக் கொள்ளப்படும். ஏதேனும் கேள்விகளுக்கு, தயவுசெய்து உங்கள் உள்ளூர் எச்டிஎஃப்ஸி வங்கிக் கிளையை தொடர்பு கொள்ளுங்கள்.**